## வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் (என்ஆர்சீபி) – சாதாரண செயற்பாடுகள் - 2012

### 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தது என்றும்,

(இ) மீளாய்வாண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்கள்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 7,573,416,263 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 8,775,671,805 ஆகும். மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்று கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012<br>ரூபா | 2011<br>ரூபா | ரூபா |
| அலுவலக உபகரணங்கள் | 334,007 | 466,351 | 800,358 |
| கணனி உபகரணங்கள் | - | 655,500 | 655,500 |
| தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் | | 1,659,798,683 | 539,293,238 |
| ஒப்பந்தக் கொடுப்பனவு | 7,172,837,255 | 520,404,701 | 7,693,241,957 |
| மேற்பார்வை ஆலோசனையாளர்கள் | | | |
| - தேசிய நெடுஞ்சாலைகள் | 184,198,978 | 12,471,002 | 196,669,980 |
| - | | | |
| - மாகாண வீதிகள் | 133,418,072 | 79,553,021 | 212,971,093 |
| அளவை/ பரிசோதனைக் கட்டணங்கள் | 300,000 | 1,053,376 | 1,353,376 |
| அதிகரிக்கும் செலவினம் | 34,412,665 | 24,881,124 | 59,293,788 |
| வட்டி/ கடப்பாட்டுக் கட்டணங்கள் | 47,915,286 | 22,327,804 | 71,392,515 |

| | | |
|---|---|---|
| **7,573,416,263** | **2,321,611,562** | **8,775,671,805** |
| ========== | ========== | ========== |

## 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதிக் நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் அந்தக் கணக்கில் அத்திகதியில் உள்ளவாறான மீதி என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 27,127.61 | 3,089,870 |
| கூட்டு :- மீள் நிரம்பல்கள் | 233,580.31 | 28,699,191 |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | 1,470,558 |
| | 260,707.92 | 33,259,619 |
| கழி :- பற்றுதல்கள் | 249,017.11 | 31,773,007 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | **11,690.81** | **1,486,612** |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி, மாதாந்த வாடகை ரூபா 210,000 ஆக அல்லது ஒரு ஆண்டிற்காக முற்பணமாக செலுத்த வேண்டிய மாதாந்த வாடகை ரூபா 2,280,000 (மாதம் ஒன்றிற்கு ரூபா 190,000) ஆக இருந்தது. எவ்வாறாயினும் ஒரு ஆண்டு குத்தகை வாடகைகள் மாதாந்தம் ரூபா 200,000 ஆக இருந்ததென்று கருதி முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. இதன்விளைவாக செலுத்த வேண்டிய தொகை மிகையாக ரூபா 120,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தில் சேவையாற்றிய காலத்திற்காக செயற்திட்ட உத்தியோகத்தர்களின் பணிக்கொடைப் படிக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,330,428 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. பணிக்கொடைக்கு தகுதியற்ற நான்கு உத்தியோகத்தர்களிற்காக செலுத்தப்பட்ட ரூபா 173,034 ஆன தொகையும் இத்த தொகையில் உள்ளடக்கப்பட்டிருந்தென்று அவதானிக்கப்பட்டது.

## 3.2 திட்டமிடலும் கண்காணிப்பும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறித்த செயற்திட்டக் காலத்திற்குள் செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்துவதற்காக அனைத்து செயற்திட்ட காலத்தையும் உள்ளடக்கும் விதத்தில் மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு ரீதியாக நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக் காட்டும் முழுமையான விபரமான செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அடைய வேண்டிய இலக்குகளுடன் பிரதான பதவியணியின் பொறுப்புக்களை தௌிவாக இனங்காணுகின்ற செயற்பாட்டுத் திட்டம் மற்றும் அக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலான பாதீட்டு ஒதுக்கீடு என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, செயற்திட்டத்தின் முழுமையான முன்னேற்றத்தை சரியான அளவீடுகளை எடுக்கும் நோக்கிலும் அத்தகைய குறிக்கோள்களை அடைவதற்கான முக்கியமான மாற்றங்களை செய்வதற்கும் முறையாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தப் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டு சான்றுபடுத்தப்பட்டிருக்காத போதிலும் 12 ஒப்பந்த பொதிகள் தொடர்பில் ரூபா 1,017 மில்லியன் தொகை செலுத்த வேண்டியவையாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின்படி, 125.16 கிமீ மொத்த நீளமான வீதிப் புனரமைப்பு/ முன்னேற்றத்திற்கான எட்டுப் பொதிகள் மீளாய்வாண்டின் போது ரூபா 7,922.5 மில்லியன் கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், வீதிப் புனரமைப்பு/ முன்னேற்றத்தின் 3 பொதிகள் ரூபா 2,295.2 மில்லியன் ஒப்பந்த பெறுமதியில் 41.54 கிமீ மொத்த நீளமான முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய 5 பொதிகளின் பௌதீக செயலாற்றல் 70 % முதல் 91 % வரையான வீச்சிலிருந்தன.

## 4. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மேற்கொள்ளப்பட்ட பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டு இறுதிவரையான நிதிகளின் பயன்பாடு என்பன கீழே காட்டப்படுகின்றன.

| | கடன் உடன்படிக்கையில் வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான ஆண்டு மதிப்பீட்டில் பாதீட்டு ஏற்பாடு | பயன்படுத்திய நிதிகள் – மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் – 2012 திசெம்பர் 31 வரை | | % ஆக பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | |
| ஏடிபீ | 130 | 14,950 | 5,000 | 38.87 | 4,963.37 | 59.57 | 7,228.38 | 48.34 |
| ஜீஓஎஸ்எல் | 16 | 1,823 | 50 | | 17 | | 21.94 | 1.2 |
| | **146** | **16,773** | **5,050** | **38.87** | **4,980.37 *** | **59.57** | **7,250.32*** | **43.22** |

* ஒப்பந்தகாரர்களிற்கு செலுத்த வேண்டியவைகள் மற்றும் அட்டுறு செலவினம் என்பவற்றினைத் தவிர்த்தமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையகளிலிருந்து இத்தொகைகள் வித்தியாசப்படுகின்றன.

### 4.2. பௌதீக செயலாற்றல்

#### 4.2.1 மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவு வரையான ஏ034 வீதியின் புனரமப்பு/ முன்னேற்றம் (13 கிமீ தொடக்கம் 24 கிமீவரை)

2012 ஆம் ஆண்டின் செயற்திட்டம் தொடர்பான முன்னேற்ற அறிக்கையின்படி, மீளாய்வாண்டிற்காக இலக்கிடப்பட்ட 100 % முன்னேற்றத்தில் 72.64 % முன்னேற்றம் மாத்திரமே அடையப்பட்டிருந்தமையால், உண்மையான முன்னேற்றம் இலக்கினை

விடப் பின்னோக்கியிருந்தது. வீதிப் புனரமைப்பு/ முன்னேற்றத்தின் பிரதான கூறுகளின் விரிவான முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

| **விபரங்கள்** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம்** |
|---|---|
| | **%** |
| துப்பரவாக்கலும் அகழ்தலும் | 96.00 |
| ஏல்லை குறித்தல் | 93.31 |
| உப- தளம் | 86.00 |
| தளம் | 60.00 |
| அஸ்பாஸ்ட் வெயரிங் கோர்ஸ் | 39.41 |
| பாலங்கள் – சட்ட பாலங்கள் | 87.00 |
| ஓட்டுப் பாலங்கள் | 97.00 |
| பெட்டி மதகுகள் | 97.00 |
| வரிசை நீரகற்றல் | 95.00 |
| நடை பாதைகள் | தொடங்கப்பட்டது |

13 கீமீ தொடக்கம் 24 கிமீ வரையில் மீளாய்வாண்டின் போது சகல வேலைகளும் பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டுள்ள போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதிப் புனரமைப்பு/ வேலைகளின் முன்னேற்றம், மதகுகள், பாலங்கள், வரிசை நீரகற்றல் மற்றும் அணுகும் வீதிகள் என்பன பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் செயற்திட்டப் பணிப்பாளர் ஒப்பந்தகாரர் எல்லை குறித்தல் மற்றும் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் தார் பற்றாக்குறை என்பன காரணமாக கால நீடிப்பைக் கோரியிருந்ததாக உணர்ந்திருந்தார்.

**4.2.2 மாங்குளம் முதல் முல்லைத்தீவு வரையான ஏ034 வீதிக்கான புனரமப்பு/ முன்னேற்றம் (38+500 கிமீ முதல் 49 +100 கிமீ வரை)**

2012 ஆம் ஆண்டின் செயற்திட்டம் தொடர்பான முன்னேற்ற அறிக்கையின்படி, மீளாய்வாண்டிற்காக இலக்கிடப்பட்ட 100 % முன்னேற்றத்தில் 62.14 % முன்னேற்றம் மாத்திரமே அடையப்பட்டிருந்தமையால், உண்மையான முன்னேற்றம் இலக்கினை

விடப் பின்னோக்கியிருந்தது. வீதிப் புனரமைப்பு/ முன்னேற்றத்தின் பிரதான கூறுகளின் விரிவான முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

| **விபரங்கள்** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம்** |
|---|---|
| | % |
| துப்பரவாக்கலும் அகழ்தலும் | பூர்த்தியாக்கப்பட்டது |
| ஏல்லை குறித்தல் | 40.00 |
| உப- தளம் | 63.21 |
| தளம் | 82.00 |
| அஸ்பாஸ்ட் வெயரிங் கோர்ஸ் | 55.01 |
| பாலங்கள் | 98.00 |
| பேட்டி மதகுகள் | 95.00 |
| வரிசை நீரகற்றல்கள் | 89.00 |

மீளாய்வாண்டின் போது சகல வேலைகளும் பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 38+500 கிமீ முதல் 49 +100 கிமீ வரை வீதிப் புனரமைப்பு/வேலைகளின் முன்னேற்றம், மதகுகள் பாலங்கள், வரிசை நீரகற்றல் மற்றும் அணுகும் வீதிகள் என்பவற்றின் வேலைகள் 2012 திசெம்பர் 31 உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் ஒப்பந்தகாரர் தேவையான தள்ளுவண்டி இடங்களைச் செயற்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அங்கீகாரத்தை பெறுவதில் தாமதங்கிற்கு உள்ளகியிருந்தென்று செயற்திட்டப் பணிப்பாளர் குறிப்பிட்டிருந்தார். நில வேலைகள் தாமதப்பட்டமை மற்றும் தார் தட்டுப்பாடு மற்றும் பாதகமான காலநிலை நிலைமை காரணமாகவும் வேலைகள் தாமதப்பட்டன. எவ்வாறாயினும் ஒப்பந்தகாரர் கால நீடிப்பு கோரியிருந்தார்.

### 4.2.3 நாவற்குழி தொடக்கம் கேரதீவு வரையான ஏ 032 வீதிக்கான புனரமப்பு/ முன்னேற்றம் (0 கிமீ முதல் 17 +400 கிமீ வரை)

(அ) 2012 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டம் தொடர்பான முன்னேற்ற அறிக்கையின்படி, மீளாய்வாண்டிற்காக இலக்கிடப்பட்ட 99.20 %

முன்னேற்றத்தில் 90.90 % முன்னேற்றம் மாத்திரமே அடையப்பட்டிருந்தமையால், உள்ளபடியான முன்னேற்றம் இலக்கினை விடப் பின்னோக்கியிருந்தது. இது தொடர்பில் ஒப்பந்தகாரர் 2013 மார்ச் 28 இல் பெருமளவில் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் தார்க் குறைவு காரணமாக 50 நாட்கள் காலநீடிப்பு வழங்கப்பட்டது என்று செயற்திட்டப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

(ஆ) செயற்திட்டத்தால் வீதிகள் புனரமைப்பு/ முன்னேற்ற வேலைகள் (சீபீ 4) 2013 சனவரி 27 இல் பூர்த்தியாக்க வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வீதிகள் புனரமைப்பு/ முன்னேற்றத்தின் பாறைகள் நிரப்புதல் மற்றும் விளிம்புகள் அணைத்தல் என்பன 2013 மே 30 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போதும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் ஒப்பந்தகாரர் 2013 மார்ச் 27 இல் பெருமளவான வேலைகள் பூர்த்திசெய்திருந்ததுடன் குறைபாட்டு தாமதக் காலத்தின் போது நிலுவையாகவிருந்த வேலைகள் கவனிக்கப்பட்டன என்று செயற்திட்டப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

### 4.2.4. வல்லை தொடக்கம் அராலி வரையான பீ437 வீதிக்கான புனரமப்பு/ முன்னேற்றம் (0 கிமீ முதல் 27 +400 கிமீ வரை)

(அ) ஒப்பந்தகாரரால் வழங்கப்பட்ட கூற்றின்படி, 9+210 கீமீ முதல் 9+780 கிமீ வரை குறிப்பிடத்தக்க அஸ்பாஸ்ட் வெயரிங் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2013 மே 30 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போதும் 9+210 கிமீ நடைபாதையில் அஸ்பாஸ்ட் மேற்பரப்பு வெடித்திருந்ததுடன் அஸ்பாஸ்ட் மேற்பரப்பு சக்கரக் குறியீடுகள் காணப்பட்டன. இது தொடர்பில், குறித்த பிரிவில் அஸ்பாஸ்ற் வேலைகள் 2012 நவம்பர் மாதத்தில் செய்யப்பட்டிருந்ததுடன் 2013 யூன் மாதத்தில் அஸ்பாஸ்ற் வெயரிங் கோஸ் மற்றும் அருகிலுள்ள கிரவல் பரவுதல் மேற்பரப்பில் நீண்ட வெடிப்புகள் அவதானிக்கப்பட்டதென்று செயற்திட்டப் பணிப்பாளர் புறிப்பிட்டார்.

(ஆ) 10 கிமீ முதல் 27+400 கிமீ வரையில் மதகுகள் மற்றும் அணுகும் வீதிகளின் வீதிப் புனரமைப்பு/ முன்னேற்ற வேலைகள் (சீபி6) அத்தகைய வேலைகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்குவதற்கு இலக்கிடப்பட்டுள்ள போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் 2013 மே 27 இல் ஆரம்ப

பட்டியலிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியில் பெருமளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததென செயற்திட்டப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

### 4.2.5 ஒப்பந்த பொதிகளின் கீழான சிவில் வேலைகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒப்பந்தகாரருடைய இலக்குகள் மற்றும் உள்ளபடியான முன்னேற்றம் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஒப்பந்த பொதிகள் | இலக்கு (%) | உள்ளபடியான முன்னேற்றம் (%) |
|---|---|---|
| 1 | 4.73 | 2.99 |
| 2 | 0.87 | 1.03 |
| 3 | 1.02 | 1.02 |
| 4 | 9.00 | 4.70 |
| 5 | 14.42 | 4.30 |
| 6 | 18.18 | 1.50 |
| 7 | 11.50 | 9.00 |
| 8 | 32.00 | 8.00 |
| 9 | 21.00 | 13.00 |
| 10 | 15.00 | 7.00 |

### 4.2.6 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

| | சீபி1 | சீபி2 | சீபி3 | சீபி4 | சீபி5 | சீபி6 | சீபி7 | சீபி8 | சீபி9 | சீபி10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வீதியின் நீளம் | | | | | | | | | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (கிமீ) | 23.35 | 24.14 | 14.5 | 17.4 | 17.4 | 14.0 | 13.0 | 11.0 | 14.5 | 10.6 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் (%) | 70.5 | 81.6 | 99.2 | 90.9 | 99.5 | 80.2 | 98.0 | 72.6 | 91 | 80 |

## 4.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படகின்றது.

(அ) கணக்கீடு மற்றும் கண்க்குப் பதிவேடுகளின் பேணுகை

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்

(இ) செயலாற்றல்

(ஈ) வாகனங்களின் பாவனை